(307)



**அனுப்புநர்**
திரு.பா.ரமேஷ்குமார், பி.இ., எம்.பி.ஏ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
குமரன் வணிக வளாகம் ((முதல் தளம்),
திருப்பூர் - 641 601.
Email : tiruppur.rdd @gmail.Com
Phone : 0421-2235500

**பெறுநர்**
திரு.K.P.கோபால்சாமி மற்றும்
திரு.P.கோவிந்தராஜ் ,
No.5, 4-வது வீதி,
கொங்கு மெயின் ரோடு,
திருப்பூர் - 641607.

**ந.க.எண்.1067/2021/திமா** **நாள் : 01 .07.2021**

ஐயா,

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்புத்துறை - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - திருப்பூர் மாவட்டம் - அவினாசி வட்டம் - திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் - தொரவலூர் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள்.65/1A, 65/1B, 65/1C, 65/1D1, 66/3B2, 66/4B1B, 67/2B2, 67/3B -ல் **2.36½** ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் - குறித்து.

பார்வை:
01. மனுதாரர் திரு.K.P.கோபால்சாமி மற்றும் திரு.P.கோவிந்தராஜ் திருப்பூர் ஆகியோரது இணையதள விண்ணப்பம் எண். 202102801010005 நாள் 01.01.2021 மற்றும் இணைப்புகள் பெறப்பட்ட நாள் 13.04.2021
02. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1067/2021/திமா, நாள் 23.04.2021
03. மனுதாரர் திரு.K.P.கோபால்சாமி மற்றும் திரு.P.கோவிந்தராஜ் திருப்பூர் ஆகியோர்கள் கடிதம் பெறப்பட்ட நாள் 05.05.2021 [மனைப்பிரிவு சாலைகள் மூலை முடுக்குகள் உட்பட மற்றும் பொது உபயோகம் (A) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண். **2209/2021** நாள் 03.05.2021) மற்றும் மின் பகிர்மானத்திற்கான இடம் (B) உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண். **2210/2021** நாள் 03.05.2021]
04. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(I) துறை, நாள்.31.01.2020.
05. அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.05.2017.
06. வேளாண்மை இணை இயக்குநர், திருப்பூர் மாவட்டம் அவர்கள் கடிதம் எண். இ2/1786/2021, நாள் 23.02.2021.
07. அரசாணை எண்.181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.09.12.2020.
08. அரசாணை எண்.138 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி நவ4(3)த்துறை, நாள்.04.06.2004
09. நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019/BA2 நாள் 06.11.2019.
10. அரசு கடிதம் எண்.19113/ந.வ4(3)/2017-1 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 30.08.2017.

11. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/BA1 நாள் 08.09.2017.
12. இவ்வலுவலக கேட்பு கடிதம், இதே எண். நாள்.21.06.2021.
13. மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள். 23.06.2021
14. இவ்வலுவலக கடிதம், இதே எண். நாள். 01.07.2021. (ம.வ/ந.ஊ.(தி.மா) எண்.149/2021, நாள். 01.07.2021

*****

மேற்காண் பொருளில் கண்டுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு பார்வை 14-ல் கண்டுள்ள இவ்வலுவலக கடிதம் மூலம் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு தலைவர், தொரவலூர் ஊராட்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. எனவே இறுதி ஒப்புதல் தொடர்பாக தலைவர், தொரவலூர் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.

01/7/21 1.7.21

(323)

# தொரவலூர் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி .எஸ்.தேவகி

ந.க.எண் : 2/2021.2022 நாள்: 22-10-2021

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - ஊரக வளர்சி மற்றும் ஊராட்சித்துறை-திருப்பூர்ஊராட்சி ஒன்றியம்,தொரவலூர்ஊராட்சி ஆண்டிபாளையம் குக்கிராமம்க.ச.எண்.65/1A.65/1B,65/1C,65/1D1,66/3B2,66/ 4B 1B,67/2B2,67/3B-ல் 2.361/2 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது-மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் மற்றும் இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

1. அரசானை எண்:71 ஊரக வளர்ச்சி துறை நாள் :16.06.2003
2. அரசானை எண் :79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நவ 4(3)நாள் :04.05.2017.
3. அரசாணை எண்: 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :04.02.2019.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் ,திருப்பூர் மண்டலம் செயல்முறை நடவடிக்கை ந.க. எண். 1067/2021/தி.ம.1நாள் : 01-07-2021
5. தொரவலூர் ஊராட்சி தீர்மான எண் : 42 /2021 நாள் : 22-09-2021
6. தொரவலூர்ஊராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்ட இரசீது எண் : 04981 நாள் : 11-10-2021

<u>உத்தரவு :</u>

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், தொரவலூர் ஊராட்சி, ஆண்டிபாளையம் (குட்டைக்கருப்பராயன்கோயில்) குக்கிராமம், க.ச.எண்:65/1A65/1B,65/1C,65/1D1,66/3B2,66/4B1B 67/2B2, 67/3B-ல் 2.361/2 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச மனைப்பிரிவிற்கு பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கை தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேச மனைப்பிரிவிற்கு மவ/ந.ஊ(தி.ம) எண்.149/2021 என எண்ணிடப்பட்டுள்ளது 2.361/2 ஏக்கர்*1000 = ரூ.2370/- (ரூபாய் இரண்டாயிரத்து

முன்னூற்று எழுபது மட்டும்) பார்வை 6-ல் காணும் தொரவலூர் ஊராட்சி பொதுநிதி கணக்கில் ரொக்கமாக (இரசீது எண்: 04981 நாள்: 11-10-2021)ன் படி செலுத்தியுள்ளார்.

மேலும் பாா்வை-2ல் காணும் அரசாணையின்படி மனையிடத்தில் சந்தை மதிப்பில் 3% தொகை ரூ40500/-அரசுகணக்கு எண்:0217-60-800-AS-2790ல் சலான் எண்: 02 நாள்: 09-08-2021 ன் படி அரசு தலைப்பில் செலுத்தியுள்ளார்.

எனவே இணைப்பில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருப்பூர் மண்டலம் அவர்களின் மனைப்பிரிவு மவ/ந.ஊ(தி.ம) எண்: 149/2021 கோப்பு எண்1067/2021 ந.க.எண:1067/2021/திம1நாள்:01-07-2021ல் சுட்டிக் காட்டிய அனைத்து மனைப்பிரிவுகள் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம், திருப்பூர் மண்டலம் அவர்களின் செயல்முறை நடவடிக்கையின் படி வழங்கப்பட்ட மவ/ந.ஊ(தி.ம) எண்: 149/2021ல் குறிப்பிட்டுள்ளவாறு எல்லைக்கற்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

3. மனைப்பிரிவு அனுமதி பெறும்போது செலுத்தப்பட்ட கட்டணம் தவிர வேறு ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென்று அறிவிப்பு கிடைத்தால் உரிமையாளர் ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளருடைய பொறுப்பாகும்.

4. மேலே கண்ட நிபந்தனைகளில் ஏதாவது ஒன்று அல்லது அனைத்தும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டோ மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.

5. இந்த மனைப்பிரிவு அனுமதி தவறான முறையில் பெறப்பட்டதாகவோ அல்லது தவறுதலுக்கு இடம் கொடுக்கக்கூடியதாகவோ இருக்கும் என செயல் அலுவலர் கருதும் பட்சத்தில் இந்த மனைப்பிரிவு அனுமதியை இரத்து செய்வதற்கோ அல்லது மாற்றம் செய்வதற்கோ உட்பட்டதாகும் .

6. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் ,திருப்பூர் மண்டலம் அவர்களின் மனைப்பிரிவு ம/வ ந.ஊ(தி.ம) கோப்பு எண் : 1067/2020 ந.க. எண் 1067/2021/திம1 நாள் :01-07-2021ல் காணும் சுட்டிக்காட்டிய அனைத்து மனைப்பிரிவுகள் சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 8 வரை நிறைவு செய்த பிறகே மனைப்பிவு பத்திர பதிவு மேற்கொள்ளப்பட வேண்டும் .

7. மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டால் அங்கீகாரம் இரத்து செய்யப்படும் .

S.Dhanalakshmi

தலைவர்
தொரவலூர்ஊராட்சி

இணைப்பு :

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம் ,திருப்பூர் மண்டலம்
அவர்களின் செயல்முறை நடவடிக்கை நகல் ,நிபந்தனைகள்
மற்றும் வரைபடம் (அசல் -1)

பெறுநர் :
திரு.K.P.கோபால்சாமி
திரு.P.கோவிந்தராஜ்
NO5,4-வது வீதி
கொங்கு மெயின்ரோடு
திருப்பூர்-641607

நகல் :

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர் மண்டலம்
2. உதவி இயக்குநர் (நிலஅளவை),மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ,திருப்பூர் .
3. நகர் ஊரமைப்பு ஆணையா,867,அண்ணாசாலை சென்னை -600002.
4. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்)திருப்பூர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
5. வட்டாட்சியர் அவினாசி, திருப்பூர் மாவட்டம் .
6. சார் பதிவாளர் அலுவலகம், குன்னத்தூர்